## நாம் ஒன்றிணைந்து குழந்தைப்பருவ மாற்றுத்திறன் ஆராய்ச்சியின் எதிர்காலத்தை வடிவமைக்கிறோம்!

ஒவ்வொருவரும் இணைய வாய்ப்புள்ளபோது ஆராய்ச்சி மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது. ஒன்றிணைந்து கண்டுபிடிப்புகளைச் செய்வோம்!



**மேலும் அறிய**
hollandbloorview.ca/connect2research -ஐப் பார்வையிட QR குறியீட்டை ஸ்கான் செய்யவும்

எங்களுக்கு மின்னஞ்சல் செய்யவும்:
**connect2research@hollandbloorview.ca**

எங்களைத் தொடர்புகொள்ளவும்:
**416-425-6220 ext. 3000**

Bloorview
RESEARCH INSTITUTE

## ப்ளோர்வியூ ஆராய்ச்சி நிறுவனம் பற்றி

ப்ளோர்வியூ ஆராய்ச்சி நிறுவனம் (BRI), ஹாலண்ட் ப்ளோர்வியூ குழந்தைகள் புனர்வாழ்வு மருத்துவமனையின் உள்ளே அமைந்துள்ளது. இது கனடாவின் மிகப்பெரிய சிறுவர் புனர்வாழ்வு மருத்துவமனை ஆகும் மற்றும் டொரோண்டோ பல்கலைக்கழகத்துடன் முழுமையாக இணைக்கப்பட்டுள்ளது.
கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக, இது கனடாவின் முன்னணி 40 ஆராய்ச்சி மருத்துவமனைகளில் ஒன்றாக தொடர்ந்து இடம்பெற்று வருகிறது.
குழந்தைகளின் மாற்றுத்திறன் தொடர்பான ஆராய்ச்சிக்காக பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள கனடாவின் ஒரே ஆராய்ச்சி நிறுவனம் இதுவே. உலகளாவிய அளவிலும் இத்தகைய நிறுவனங்கள் மிகச் சில மட்டுமே உள்ளன.

BRI, மருத்துவர்கள், உளவியலாளர்கள், துணை சுகாதார வல்லுநர்கள், பொறியாளர்கள், நரம்பியல் நிபுணர்கள், சமூகவியலாளர்கள் மற்றும் நகரத் திட்டமிடுபவர்களையும் கூட உள்ளடக்கிய பல்வேறு துறைகளிலிருந்து சிறந்த ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பயிற்சியாளர்களின் அணிகளை ஒன்றிணைக்கிறது.
அவர்கள் சமூகத்துடன் இணைந்து, குழந்தைகளின் ஆரம்ப பருவ மாற்றுத்திறன், காயம் மற்றும் வளர்ச்சி பன்முகத்தன்மை குறித்த மருத்துவ ரீதியாக முக்கியமான மாற்றத்தை உருவாக்கும் ஆராய்ச்சிகளை இணைந்து வடிவமைத்து (co-design) நடத்தி வருகின்றனர்.

**Holland Bloorview Kids Rehabilitation Hospital**
150 Kilgour Road, Toronto, ON M4G 1R8
தொலைபேசி: 416-425-6220
கட்டணமில்லா எண்: 800-363-2440
தொலைநகல்: 416-425-6591
மின்னஞ்சல்: info@hollandbloorview.ca

**hollandbloorview.ca**

[2027.25]




# connect2research

ஹாலண்ட் ப்ளோர்வியூ (Holland Bloorview) -இல் குடும்பங்களை ஆராய்ச்சியுடன் இணைக்கிறது

## ஆராய்ச்சி உங்களுடன் தொடங்குகிறது!

Holland Bloorview
Kids Rehabilitation Hospital

## Connect2research என்றால் என்ன?

Holland Bloorview -இல் நடத்தப்படும் ஆராய்ச்சிகள் குழந்தைகள் மற்றும் இளையோரின் பராமரிப்பு, சிகிச்சைகள், தொழில்நுட்பங்களை மேம்படுத்த உதவுகிறது.

குடும்பங்கள் தங்களுக்கு நன்கு பொருந்தக்கூடிய ஆராய்ச்சி வாய்ப்புகளுடன் இணைய உதவும் பாதுகாப்பான தரவுத்தளமாக connect2research உள்ளது.

## முக்கிய தகவல்கள்:

- குழந்தைப்பருவ மாற்றுத்திறன் பராமரிப்பில் புதுமைகளைப் புகுத்த ஆராய்ச்சி உதவுகிறது.
- Holland Bloorview -இல் சேவை பெறும் அனைவரும் அவர்களாக விலகாத பட்சத்தில் தானாகவே சேர்க்கப்படுவர்.
- பங்கேற்பு **எப்போதுமே** உங்கள் **சுய விருப்பமே**—உங்களுக்கு எது சரி என்பதை நீங்களே தேர்வுசெய்கிறீர்கள்.



## இது எவ்வாறு செயல்படுகிறது?

1. **நீங்கள் தானாகவே சேர்க்கப்படுகிறீர்கள்** – நீங்கள் Holland Bloorview -இல் மே 1, 2011 முதல் சேவைகளைப் பெற்றிருந்தால், தரவுத்தளத்தில் நீங்கள் சேர்க்கப்பட்டிருப்பீர்கள்.
2. **ஆராய்ச்சியாளர்கள் தகுதியான பங்கேற்பாளர்களைக் கோருகின்றனர்** – உங்கள் சுயவிபரத்துடன் ஆய்வு பொருந்தினால், உங்கள் தொடர்புத் தகவல்கள் ஆராய்ச்சிக் குழுவுடன் பகிரப்படும் (நெறிமுறை ஒப்புதலுக்குப் பின்பு மட்டுமே).
3. **நீங்கள் அழைக்கப்படுவீர்கள்** – ஓர் ஆராய்ச்சியாளர் ஆய்வு குறித்த விபரங்களுடன் உங்களை மின்னஞ்சல், தொலைபேசி அல்லது அஞ்சல் வாயிலாகத் தொடர்புகொள்ளலாம்.
4. **நீங்கள் தீர்மானிக்கிறீர்கள்** – பங்கேற்பது எப்போதுமே உங்களைப் பொறுத்தது!

**விலக விரும்புகிறீர்களா?** எந்த நேரத்திலும் நீங்கள் விலகிக் கொள்ளலாம் - எங்களுக்கு மின்னஞ்சல் அல்லது தொலைபேசியில் அழைத்துக் கூறினால் போதும்.


## உங்கள் தனியுரிமை முக்கியம்

தனியுரிமையை நாங்கள் தீவிரமாக எடுத்துக் கொள்கிறோம்! **connect2research** கடுமையான பாதுகாப்பு மற்றும் தனியுரிமைக் கொள்கைகளைப் பின்பற்றுகிறது.

**வரம்புக்குட்பட்ட தகவல்கள்** மட்டுமே பகிரப்படுகிறது (வயது, நோயறிதல், தொடர்பு விபரங்கள்).

**உங்கள் முழு மருத்துவப் பதிவுகளும் தனிப்பட்டதாகவே இருக்கும்**—அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்புக் குழுக்களால் மட்டுமே அதை அணுக இயலும்.

ஹாலண்ட் ப்ளோர்வியூவில் உங்கள் பராமரிப்புக்குப் பாதிப்பின்றி நீங்கள் **எந்த நேரத்திலும் விலகலாம்.**




## ஏன் பங்கேற்க வேண்டும்?

**உங்கள் கருத்து முக்கியம்!**

ஓர் ஆய்வில் இணைவதால், நீங்கள் பின்வருவனவற்றிற்கு உதவுகிறீர்கள்:

- சிறந்த சிகிச்சைகளையும் தெரபிகளையும் வடிவமைக்கிறீர்கள்.
- சுகாதாரப் பராமரிப்பு தொழில்நுட்பத்தை மேம்படுத்துகிறீர்கள்.
- அனைத்துக் குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்குக் கிடைக்கக்கூடியதாக ஆராய்ச்சியை உருவாக்குகிறீர்கள்.

**உண்மையான தாக்கம்:** Holland Bloorview -இல் முந்தைய பல ஆய்வுகள் மறுவாழ்வு, உதவும் தொழில்நுட்பம், சமூக உள்ளடக்கம் ஆகியவற்றில் வாழ்க்கையை மாற்றும் மேம்பாடுகளுக்கு இட்டுச் சென்றுள்ளது!